بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா**

**01 June 2018 (16 Ramadan 1439 A H)**

# “RAMADAN & GOOD MANNERS”

# “ரமலான் மற்றும் நல்ல நடத்தை”



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

ரமலான் மாதம், நற்குணங்களை வளர்ப்பதற்கான வழியினை நமக்கு வகுக்கின்றது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு நபி மொழியில் காணலாம்.

**1. “எவர் ஒருவர் பொய் மற்றும் தீய செயல்களை கைவிட்டு கொள்வதில்லையோ, அவர் உணவு மற்றும் பானங்களை தவிர்த்துக் கொள்ளுதல் தேவையில்லை என அல்லாஹ் கூறுகின்றான். ஏனெனில் அல்லாஹ் அத்தகையாளர்களின் நோன்பு நோற்பை ஏற்றுக் கொள்வதில்லை”. (புகாரி)**

2. **“நோன்பு நோற்பு என்றால் உணவு மற்றும் பானங்களை தவிர்த்துக் கொள்தல் மட்டுமல்ல என உணர வேண்டும். மாறாக, தீயபேச்சு மற்று தீய செயல்களை கைவிட்டுக் கொள்தலுமாகும். ஒருவர் உங்களை புண்படுத்திக் கொள்ளவோ, உங்களிடம் மோசமாக நடந்துக் கொள்ளவோ செய்தால் அந்நபரிடம் நீங்கள் கூறுங்கள். நான் நோன்பாளி...........நான் நோன்பாளி” (புகாரி)**

மேல் கூறப்பட்ட இரண்டு விளக்கங்களும் உண்மை மற்றும் நல்நடத்தை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. இந்த அருளுக்குரிய மாதமானது, உணவு மற்றும் பானங்களிலிருந்து விலகி நிற்க நம்மை கற்பிப்பது மட்டுமல்ல மாறாக மக்கள் மனதை காயப்படுத்துவதிலிருந்தும், அவர்களின் உரிமைகளைப் பறிப்பதிலிருந்தும் அகன்று நிற்கவும் அது நமக்கு கட்டளை விடுவிக்கின்றது.

ஒரு உண்மையான நம்பிக்கையாளரைப் பற்றி அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்குகின்றார்.

**“ஒரு முஸ்லீம் என்றால், அவரது நாவு மற்றும் கைகள் கொண்டும் மற்ற முஸ்லீம்கள் பாதுகாப்பாகயிருக்க வேண்டும்” (புகாரி)**

எனவே, மனிதர்கள் என்ற நிலையில் நம் குறைபாடுகள் என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்துக் கொள்ள வேண்டும். பின்னர் அவைகளை சீர் அமைத்துக் கொள்ள நாம் தயாராக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ரசூல் (ஸல்) அவர்களின் நடைமுறைகளை பற்றிப் பிடிக்கவேண்டும். கீழ் கூறும் நபி மொழியின் தன்மையை நாம் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். **“நான் உண்மையான வழியில்தான் நிற்கின்றேன் என்று உறுதியிருந்தால்க் கூட வாதாடாமல் கீழ் பணிவோர்களுக்கு சொர்க்கத்தில் ஒரு வீடு உண்டு என நான் உறுதியளிக்கிறேன். வேடிக்கைக்காக கூட ஒரு பொய்யும் கூறாமல் பின் வாங்கி கொள்போருக்கு சொர்க்கத்தின் நடுவில் ஒரு வீடு உண்டு என நான் உறுதியளிக்கிறேன். நல்இயல்பைக் கொண்ட ஒருவருக்கு சொர்க்கத்தின் உன்னதமான பகுதியில் ஒரு வீடு உண்டு என நான் உறுதியளிக்கிறேன்” (அபூதாவூத்)**

**“அடக்குமுறையை தவிர்ப்பதன் மூலமும், அருவருப்பான செயல்களை தவிர்ப்பதன் மூலமும், உங்கள் முஸ்லீம் சகோதர – சகோதரிகள் மீதான வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சியினை தவிர்ப்பதன் மூலமும், உங்களின் சகோதரர்களை ஏளனம் செய்வதிலிருந்து பின் வாங்கிக்கொள்வதன் மூலமும், இரண்டு பேர் ஒருவருக்கொருவர் மோதி, அது வழியாக அமைதியை இழக்கும் நிலை**

**உருவாகாமலிருக்கவும் மற்றும் சதியும், கொலையும் நிகழாமலிருப்பது மூலமும், பொய்மையும் தீய செயல்களையும் தவிர்ப்பதன் மூலமும், உங்களுக்கு (நோன்பு நோற்பதன் வழியாக) மாபெரும் வெகுமதிகளை இழக்காமலிருக்க முடிந்து விடும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார், "மனிதர்களின் சிலர் உள்ளனர் அவர்கள் பசி மற்றும் தாகத்தை சந்திக்கின்றனர் என்பதன்றி எவ்வித வெகுமதிகளையும் பெறுவதில்லை". (இப்னுமாஜ, அஹ்மது)**

நிச்சயமாக, நீதிக்காகவும் நேர்மைக்காகவும் ஒருவர் போராட வேண்டும். அதைப் போன்றே பிறரை காண்பிப்பதற்காக மேற்கொள்ளும் செயல்களிலிருந்து விலகி நிற்கவும் வேண்டும். இஸ்ஹான் என்றால் இபாதத் செய்தல் ஆகும். அதாவது, இறைவணக்கமாகும். அல்லாஹ்வை முன்னால் காண்பதைப் போன்று! நாம் அவனை காணவில்லை என்றிருந்தால்க் கூட! ஆனால் அவன் நம்மை மட்டுமின்றி அனைத்தையும் காண்கின்றவனாக இருக்கின்றான் என்பதை நாம் உணர வேண்டும்.

ஆகவே நாம் நோன்பு நோற்பவராகயிருக்கும் போது நாம் நம்மை ஆராய்ந்துக் கொள்பவராக இருக்க வேண்டும். பிறரை காண்பிப்பதற்கான செயல்களிலிருந்து நாம் விலகி நிற்கவும் வேண்டும். அதனால்தான் ஒரு குத்சியான ஹதீஸில் அல்லாஹ் இவ்வாறு கூறியிருக்கின்றான். **"நோன்பு நோற்பு எனக்குரியது அதன் வெகுமதி நானாகவேயிருக்கின்றேன்" (புகாரி)**

எல்லாம் வல்ல அல்லாஹ் நோன்பு நோற்பை ஒரு பிரத்தேகமான செயலாக வைத்துள்ளான். (முழுமையாகவும் அவனுக்காக மட்டும்) அவன் கூறுவதை பாருங்கள் **"நோன்பு நோற்பு எனக்குரியது"** ஒருவர் நோன்பு நோற்கின்றாரா இல்லையா என்பதை அல்லாஹ் அல்லாமல் வேறு எவரும் காண்பதில்லை என்ற உண்மை எஞ்சுகின்றது.

ரமலான் மாதத்தில் முஸ்லீம்களில் ஒற்றுமை மற்றும் நட்பு உருவாகின்றது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறுகின்றார். **"நோன்பு நோற்கும் நாளானது மக்கள் நோன்பு நோற்கும் போதாகும் நோன்பு திறக்கும் நாளானது அவர்கள் நோன்பு திறக்கும் நேரத்திலாகும். தியாகத்தின் நாளானது அவர்கள் தியாகங்கள் புரியும் போதாகும்". (திர்மிதி)**

இந்த நபிமொழியின் விளக்கமாவது, நாம் கட்டாயமாக நோன்பு நோற்கவும் நோன்பு துறக்கவும் வேண்டும். அது ஜமா அத்துடன் சேர்ந்து செய்ய வேண்டும். பெரும்பாலான மக்களும் ரமலானில் நோன்பு துறப்பதை ஒரு இப்பாதத்தாக எண்ணுகின்றனர். அது சமுதாயம் ஒன்றிணைந்து செய்கின்றனர். அதுமூலம் மிக பெரிய அளவிற்கு அருட்கொடைகளை பெறமுடிகின்றது. அங்கு நம்பிக்கையாளர்கள்

தோளுடன் தோள் சேர்ந்து நிற்கின்றனர். இப்தார் ஒரு குறிபிட்ட நேரத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்கின்றனர். முஸ்லீம்கள் அவர்களின் நோன்பு நோற்பை ஒன்று சேர்ந்து முடித்துக் கொள்கின்றனர். அதே கணம் இந்த அருளுக்குரிய மாதத்தில் ஒரு சமுதாயம் ஒரு சமூகம் என்ற கருத்திற்கு ஆற்றல் அதிகரிக்கின்றது. ஏனெனில் நாம் ஒன்றிணைந்து நோன்பு நோற்கின்றோம், ஒன்று சேர்ந்து நோன்பு துறக்கின்றோம். முஸ்லீம்களின் இன்றைய சூழ்நிலைகளைப் பற்றிய பகுத்தறிவுக்கு அது ஆற்றலை வளர்க்கின்றது. அத்துடன் வறுமையில் வாழும் தனது சகோதர – சகோதரிகளைப் பற்றிய எண்ணம் முளைக்கின்றது. ஏனெனில் உணவு மற்றும் தானியம் இல்லாமல் வாழ்வதன் வருத்தத்தைக் குறித்து உட்கொண்டு தொண்டு புரியும் காரியத்திற்கு முன்னுரிமை அளித்திடமும் முடிகின்றது.

ஆம்! உண்மையில் முஸ்லீம்களின் ஒத்துழைப்பு, உதவி மற்றும் ஐக்கியம் போன்றவை தான் இஸ்லாமிய போதனைகளின் அடிபடையான தூண்கள். அல்லாஹ் கூறுகின்றான். **“நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்”.** (3 :104)

எல்லா முஸ்லீம்களும் குறிப்பாக ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை ஏற்றுக் கொண்ட என் தோழர்கள் எந்நேரமும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு காரியம் என்பது நீங்கள் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் நுழைந்து விட்டோம் என்ற காரணத்தால், நாங்கள் அல்லாஹ்வுக்காக செயல்படுகின்றோம் என்றோ அல்லது இந்த எளியவனுக்காக அதாவது அல்லாஹ்வின் கலீ.்.பாவுக்கு சாதகமாக செயல்படுகின்றோம் என்றோ புரிந்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் உண்மையில் உணர வேண்டும்! நீங்கள் தனிபட்ட நிலையில் இறை அடையாளங்களை பகுத்தறிந்து அதை ஏற்றுக் கொள்ளுவதுடன் அவனது கலீப.்.பாவின் உண்மையை உறுதிப்படுத்திட வேண்டும். இதை ஏற்றுக் கொள்வதற்கு எவரும் உங்களை கட்டாயப்படுத்தவில்லை. அதனால் நீங்கள் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை ஏற்றுக் கொண்டதுடன் எல்லாம் சீராகிவிட்டது என அதற்கு அர்த்தமில்லை. (அதாவது எல்லா காரியங்களும் நொடி நேரத்திற்குள் சீராகிவிட்டது என்றோ, அனைத்து காரியங்களுக்கும் தீர்வு கண்டு விட்டோம் என்றோ எண்ண வேண்டாம். உங்கள் வாழ்க்கையை சீரமைக்க ஏராளமான தியாகங்கள் நீங்கள் புரிய வேண்டும்) நீங்கள் ஒரு நேர்மையான முஸ்லீம் என்றும், ஒரு உண்மையான இஸ்லாமிய நம்பிக்கையாளர் என்றும் உரிமைகோர வேண்டுமென்றால் நீங்கள் ஏராளமான சீரமைப்புக்கு சுயம் ஆளாகிக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கலீ.்.பா என்ற நிலையில் என்னை பகுத்தறிந்து விடவும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் நுழைந்து விடவும் பின்னர் கவலைக்குள்ளாகி

சாத்தானின் நண்பராக பரிணமித்து ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை கைவிட்டு விடவும் செய்போர்களுக்கு பெரிய அழிவேதான். நீங்கள் உணர வேண்டும். நீங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளவும். இந்நூற்றாண்டில் அவன் தோற்றுவித்த அவனது கலீ∴பாவை ஏற்றுக் கொள்ளவும், பின்னர் அதை மறுத்துக் கொள்ளவும் செய்போர்கள், பாவ மன்னிப்பை கோரி தனது வாழ்கையை சீர்திருத்திக் கொள்ளாமலுமிருந்தால் அவர்களுக்கு நிகழ்வது பெரிய அழிவே தான்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிலிருந்து மக்களை அகற்றுவதற்காக அஹ்மதியா ஜமா அத்தும் பிற அமைப்புகளும் பிரச்சாரங்களை தொடர்கின்றனர். அல்லாஹ்வின் மீதும் அவனது கலீ∴பா மீதும் முழுமையாக நம்பிக்கை கொள்ளாத சில நயவஞ்சகர்களும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிற்கு எதிராக செயல்ப்படுகின்றனர். அத்தகையாளர்கள் பாவ மன்னிப்புக் கோரி உண்மையான முஸ்லீமாக மாறி விடாமலிருப்பீர்களானால் நீங்கள் அல்லாஹ்வின் தண்டனைக்கு அஞ்சி, ஜாக்கிரதையுடனிருங்கள்.

என் உண்மையான சீடர்களே, நீங்கள் நேர்மையானவர்களாகயிருந்தால் உங்களுக்கு கவலைப்பட தேவையில்லை. அவ்வாறேயானால் உங்களையும் உங்கள் நம்பிக்கையும் அல்லாஹ் பாதுகாத்துக் கொள்வான். மாறாக நீங்கள் நயவஞ்சகர்களாகயிருந்தால் உங்களை அல்லாஹ் தான் தனது ஜமா அத்திலிருந்து (ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிலிருந்து) நீக்கி கொள்வான். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் உறுப்பினர்களை வெளியேற்றிட எந்த நடவடிக்கைகளும் (நான்) மேற்கொள்வதில்லை. மாறாக நேர்மையற்றவர்கள் மற்றும் நயவஞ்சர்களை அல்லாஹ் தான் வெளியேற்றிக் கொள்வான். இவர்கள் தங்களது தனிப்பட்ட விவகாரங்கள் காரணமாக சுயம் வெளியேறிக் கொள்வார்கள். இதை பார்வையிடும் உண்மையான நம்பிக்கையாளர்கள் கவலைப்படாமல் தங்களது நம்பிக்கையில் உறுதியுடன் இருக்க வேண்டும். இது அல்லாஹ் அவர்கள் மூலம் நடைமுறையில் கொண்டு வரும் சோதனையாகும். அதனாலாகும் அல்லாஹ் கூறுகின்றான், **“நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்.”** நீங்கள் இழந்தவர்கள் ஆகாமலிருப்பதற்காகவும் உங்களின் சூழ்நிலைகள் மிகவும் மோசமடையாமலிருப்பதற்காகவும்!.

மட்டுமல்ல கலீ∴பத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் ஒரு உண்மையைக் கூட எடுத்துக் கூறினார். தனது குடும்பத்தாரிடம், அனைவரும் என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என கட்டாயப்படுத்தவில்லை. இறைவனிடமிருந்து பெற்று வந்த வெளிப்பாடுகளைக் கூட அவர்களிடம் அன்னார் தெரிவித்ததில்லை. 2000 ஆண்டுடன் தான் இப்பிரச்சனை எழும்பியது.

(மௌரீஷியஸ் முன்னாள் அமீரின் தீய – சதி திட்டங்களால் தான் இது நிகழ்ந்தது) ஷெசில்லியஸ் அஹ்மதியா ஜமா அத்தைப் பற்றி அன்னாரின் குடும்பத்தை சார்ந்தவர்கள் சில கேள்விகள் கேட்டனர். கலீ∴பத்துல்லாஹ்வும் இது சம்பந்தமான காரியங்களை பற்றி பேசிக் கொண்டனர். ஒரு சகோதரன் தனது சகோதரனுக்கு எதிராக எப்படி சதி திட்டங்கள் தீட்ட தயாராகுவார்? மற்றொரு சகோதரன் அன்னார் மீது நம்பிக்கை கொள்ளவும் அன்னார் அவ்வேளைகளில் பெற்று வந்த இறைவெளிப்பாடுகளை பதிவு செய்து கொள்ளவும் செய்கின்றார். ஆனால் தற்போது இந்த நபர்கள் எல்லாம் எங்கு சென்றனர்? அதைப் போன்றே இறையடையாளங்களின் ஆரம்பத்தில் அன்னார் பெற்ற ஒரு வெளிப்படைப் பற்றியும் கலீ∴பத்துல்லாஹ் நினைவூட்டினர். அல்லாஹ் அன்னாரிடம் கூறினான் ஏராளம் மக்கள் வருகை தருவார்கள். புத்திசாலிகள், பயபக்தர்கள் என்ற நிலையில் நேர்மையானவர்களைப் போன்று! நாங்கள் நம்பிக்கை கொண்டோம் என அவர்கள் கூறுவார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் நம்பிக்கை கொண்டோர்களல்ல மாறாக அல்லாஹ், கலீ∴பத்துல்லாஹ் மற்றும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைப் பற்றி பகைவர்களுக்கு தகவல் கொடுப்பதற்காக மட்டுமே அவர்கள் இதில் நுழைந்துள்ளனர் அதேப் போன்றே ஜமா அத்துக்குள் இருக்கும் பாம்புகளைப் பற்றி தனது ஒரு சீடர் தரிசித்த கனவைக் குறித்தும் அன்னார் எடுத்துக் கூறினார். நான் எனது பிரசங்கத்தின்பால் திரும்பிக் கொள்கிறேன். அல்லாஹ் திருமறையில் கூறுகிறான், **“நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்”** ( 3 : 104 )

நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும் நண்பர்கள் ஆவீர்கள். அவர்கள் ஒருவருக்குக்கொருவர் பாதுகாவலர்களாகயிருக்க வேண்டும். ஒற்றுமையை குறித்து இஸ்லாம் எடுத்துக் கூறுகின்றது. சமுதாயம் மொத்தத்தில் ஒற்றுமையுடன் இருப்பதற்கு அது ஊக்குவிக்கின்றது. இந்த ஒற்றுமை ரமலான் மாதத்தில் மட்டுமல்லாமல் அதை தொடர்ந்து வரும் மாதங்களிலும் இத்தகைய இறை வணக்கத்திலும் நீங்கள் ஈடுப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக ரசூல் (ஸல்) அவர்கள் தினசரி 5 – நேர தொழுகையை ஜமா அத்தாக செய்ய வேண்டும் என நமக்கு கட்டளையிட்டார். தனியாக தொழுவதை விட 27 மடங்கு பிரதிபலன் இதற்கு உண்டு. அதைப் போன்றே ஒன்றிணைந்து ஹஜ்ஜு செய்வதற்கும் இத்தகைய வெகுமதிகள் உண்டு. இது மூலம் சமுதாயத்தின் மீது அந்த அருட் கொடைகளை அல்லாஹ் பொழிகின்றான்.

அதைப் போன்றே, நமது அனுதின செயல்களிலும் மற்றும் உணவு உண்ணும் காரியங்களிலும் சமுதாயத்தின் ஒற்றுமையை இஸ்லாம் எடுத்துக் காட்டுகின்றது. இது குறித்து வஹ்சி இப்னுஹார்ப் (ரலி) அவர்கள் விளக்குகின்றார்.

"இறைதூதர் (ஸல்) அவர்களின் சில தோழர்கள் கூறினார்கள். நாங்கள் உணவு உண்ணுகின்றோம். ஆனால் எங்களுக்கு திருப்தி கிடைப்பதில்லை. அந்நேரம் இறைதூதர் (ஸல்) அவர்கள் வினவினார், "நீங்கள் தனியாகவா உண்ணுகின்றீர்கள்"? "ஆம்" என தோழர்கள் பதிலளித்தனர். அந்நேரம் ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "நீங்கள் ஒன்று சேர்ந்து உணவு உண்ணுங்கள். உணவு உண்ணுவதற்கு முன்பு அல்லாஹ்வின் திரு நாமத்தை சொல்லுங்கள். அது உங்களுக்கு அருள் நிறைந்ததாகயிருக்கும்" (அபூதாவூத்)

"பல்வேறு பிரிவினர்களாக அமர்ந்திருந்த தனது தோழர்களின் அருகில் ஒரு முறை ரசூல் (ஸல்) அவர்கள் சென்று, நீங்கள் ஏன் விலகி விலகி ஆங்காங்கே அமர்ந்திருக்கின்றீர்கள்? என்று வினவி நின்றார். அதற்க்கு அபூத்தாலாபா அல்குஷானி (ரலி) அவர்கள், நாங்கள் பயணங்களை மேற் கொள்ளுகின்ற போது எவ்விடத்திலாவது இறங்கி விட்டோமனால் நாங்கள் வழியோரங்கள் மற்றும் பள்ளதாக்குகளில் குழு குழுவாக பிரிந்து பிரிந்து நிற்பது வழக்கம் என்று கூற, அந்நேரத்தில் ரசூல் (ஸல்) அவர்கள் உங்களை இந்த பாதையோரங்களிலும் பள்ளதாக்குகளிலுமாக பிரித்து வைப்பது சாத்தான் என்று கூறினார். நாங்கள் இதன் பின்னர் பயணத்தின் போது எவ்விடத்திலும் பிரிந்து உட்கார்ந்ததில்லை. அவ்வாறு நாங்கள் அமர்ந்துக் கொண்டால் அனைவரும் சேர்ந்து ஒரு பகுதியில் தான் அமர்ந்துக் கொள்வோம். ஒரு வலை வீசப்படுகிறது என்றால் நாங்கள் அனைவரும் அவ்வலைக்குள் அகப்படுகின்ற நிலையிலாகயிருப்போம்."

(அபூதாவூத்)

நோன்பு நோற்பு உங்கள் உடல் நலனுக்கு மிகவும் சிறந்தது. மருந்துகைகள் மூலம் பெறும் பல நன்மைகளும் அது அளிக்கின்றது. ஆரோக்கிய பாதுகாப்பிற்கு இஸ்லாம் மிக விரிவான போதனைகளை அளித்திருக்கின்றது. அதை கடைபிடித்துக் கொள்ளுமாறு முஸ்லீம்களுக்கு கட்டளை விடுக்கப்பட்டுள்ளது. வலுவாக உடம்பை பாதுகாக்க அது கூறுகின்றது. ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார், "ஒரு வலுவான விசுவாசி முற்றிலும் சிறந்தவனாகயிருக்கின்றான், ஒரு பலவீனமான வசுவாசியை விட அவனை அல்லாஹ் நேசிக்கின்றான். இருவர்களிலும் நன்மை உள்ளன" (திர்மிதி)

திருக் குர் - ஆனில் அல்லாஹ் கூறுகின்றான், "நிச்சயமாக இது உங்கள் சமுதாயம் ஒரே சமுதாயம் தான். மேலும் நானே உங்கள் இறைவன், ஆகையால் என்னையே நீங்கள் வணங்குங்கள்" ( 21 : 93 )

அல்லாஹ் மேலும் கூறுகின்றான், "நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் தாம்" ( 49 : 11 )

முஸ்லீம்கள் ஒன்றுக்கொன்றான பந்தத்தைப் பற்றி ஒரு நபி மொழியில் ரசூல் (ஸல்) அவர்கள் இவ்வாறு விவரிக்கின்றார். **“நிச்சயமாக அனைத்து முஸ்லீம்களும் ஓர் உடலை போன்றவர்கள் ஆவார்கள். அதன் ஓர் உடல் உறுப்பு வியாதியால் பாதிக்கப்பட்டால் முழு உடலும் தூக்கமின்மை மற்றும் வேதனை ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது” ( புகாரி, முஸ்லீம், திர்மிதி )**


இறுதியாக, நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனைச் செய்கின்றேன். “யா அல்லாஹ்”! எங்களை சுயம் நாங்களே சீர்திருத்தும் திறனை எங்களுக்கு நீ தந்தருளுவாயாக! எங்கள் பாவங்களுக்கு நீ மன்னிப்பளிப்பாயாக! எங்களை நீ சீரான வழியில் செலுத்துவாயாக! ஆமீன், சும்ம ஆமீன், யாரப்பல் ஆலமீன்!.




**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 7339689239, 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com



**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in